# அவசர கூட்டப்பொருட்கள்

1. இம்மாநகராட்சிக்குட்பட்ட 52 வார்டுகளில் 30 வார்டுகளில் உள்ள தெருவிளக்குகள் புத்தேரி மேம்பாலம், வடசேரி பேருந்து நிலையம் மற்றும் உயர் கோபுர விளக்குகள், தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் M/s.ஆனந்தா எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனம் கோயம்புத்தூர் மூலம் கடந்த மூன்று வருடங்களாக பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தக்காலம் 31.03.2021-ல் முடிவடைகிறது.

எனவே மேற்படி ஒப்பந்தக்காலம் முடிவடைவதாலும், இம்மாநகராட்சிக்குட்பட்ட 52 வார்டுகளில் உள்ள அனைத்து கீழ்கண்ட தெரு விளக்குகளை தனியார் நிறுவனம் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 2020-2021 –ம் ஆண்டிற்கான தர விலை விகிதப்பட்டியலின் அடிப்படையில் ரூ.2,48,00,000/- க்கு (ரூ.இரண்டு கோடியே நாற்பத்தி எட்டு லட்சம்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு அனுமதியும், மேற்படி தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட அறிக்கையினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் ஒப்புதல் பெறுவதற்கு மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

<u>தெருவிளக்கு விபரம்</u>

| | |
|---|---|
| 40WTube light | 11064 எண்ணம் |
| 30WLED light | 4340 எண்ணம் |
| 70WLED light | 248 எண்ணம் |
| 120WLED light | 384 எண்ணம் |
| 250WSV light | 1133 எண்ணம் |
| 400WHalogen | 396 எண்ணம் |
| 150WLED | 32 எண்ணம் |
| 200WLED | 5 |
| | **17,622 எண்ணம்** |

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.9845/2020/இ4

**தீர்மானம் எண்.532 – அங்கீகரிக்கப்பட்டது**

2. இம்மாநகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் மூன்றாவது குடிநீர் அபிவிருத்தி திட்ட பணிகளின் போது சேதமடைந்த சாலைகளில் பராமரிப்பு பணி செய்வதற்கு சிறப்பு சாலை திட்டம் 2020-2021 –ன் கீழ் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் கீழ்கண்டவாறு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| சிப்பம் எண் | பணியின் பெயர் | நீளம் (KM) | மதிப்பீடு தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 ஆசிர்வாதம் நகர் மற்றும் இடையன்விளை சாலை, வார்டு எண் 43 பெஞ்சமின் தெரு, சைமன் நகர் சாலை, வார்டு எண்.44, கேசரி தெரு, வார்டு எண்.51 ஏ.ஆ.கேம்ப் முதல் குருசடி சாலை வாடு எண்.44 ஏசுவடியான் சாலை தார்தளம் அமைத்தல் மற்றும் வார்டு எண்.13 கம்போளம் தெருவில் பேவர் பிறாக் சாலை அமைத்தல் பணி | 4.250 | 239.00 |
| 2 | இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9 & 10 அவ்வை சண்முகம் சாலை, வார்டு எண்.40 வட்டகரை சாலை, வார்டு எண்.20 CTM புரம் மெயின் சாலை, வார்டு எண்.22, எறும்புகாடு கோகிலான் விளை சாலை மற்றும் வார்டு எண்.19 கச்சேரி சாலை ஆகிய பகுதிகளில் தார்தளம் அமைத்தல் பணி | 4.210 | 266.00 |
| 3 | இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3, அம்மன்கோவில் சாலை, வார்டு எண்.6&29 CBH Road (VAO Office முதல் CBH வரை) வார்டு எண்.31, ஓட்டுபுறை தெரு மற்றும் வார்டு எண்.23, இந்திரா தெரு வார்டு எண்.52, அசோக் அவென்யூ ஆகிய பகுதிகளில் தார்தளம் அமைக்கும் பணி | 4.180 | 242.50 |
| 4 | இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.52 சற்குணவீதி மற்றும் சிதம்பரநாதன் தெரு, வார்டு எண்.46 வாட்டர் டேங்க் ரோடு, வார்டு எண்.43&51 SP Camp office சாலை ஆகிய பகுதிகளில் தார்தளம் அமைத்தல் மற்றும் வார்டு எண்.27 தேவசகாயம் தெரு மற்றும் வார்டு எண்.31 சார்லஸ் மில்லர் தெருவில் பேவர்பிளாக் அமைக்கும் பணி | 3.675 | 252.50 |
| | **மொத்தம்** | **16.315** | **1000.00** |

மேற்படி பணியினை சிறப்பு சாலை திட்டம் 2020-2021-ன் படி அரசு மானியம் பெற்று செய்திட மன்றம் அங்கீகரிக்கலாம்.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.10146/2020/இ3

**தீர்மானம் எண்.533 – அங்கீகரிக்கப்பட்டது**